# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.10.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *மாகாணசபை தேர்தல்கள் (திருத்தம்)*

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *6.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

## மாகாணசபை தேர்தல்கள் (திருத்தம்)

### 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப்பெயர்.*

**2.** இதன்மூலமாக 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் நீக்கப்படுகிறது.

*2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தை நீக்குதல்.*

**3.** 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தின் அத்தியாயங்கள் அனைத்தும் அனைத்து நோக்கங்களுக்காகவும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21ஆம் திகதியன்று உள்ளதைப்போலவே 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்படாததுபோல் செயற்பாட்டில் இருக்கும்.

*1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தின் அத்தியாயங்கள், 2017, செத்தெம்பர் 21இல் உள்ளது போன்று செல்லுபடியாகும்.*

**4.** 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் தேதிக்கு பிறகு செய்யப்பட்ட அல்லது செய்யப்படும் எந்தவொரு செயலும் ஏற்றமாற்றங்களுடன், 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று நடைமுறையில் இருந்த 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபை தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் செய்யப்பட்டதாக கருதப்படும்.

*2017, செத்தெம்பர் 22இற்கு பிறகான சட்டம்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*